/பாதுகாப்பான முறையில்/

சேலம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு.மு.கபீர், எம்.எஸ்.சி.,பி.எட்.,எம்.பில்.
மூ.மு.எண்.005521/ஆ1/2024 நாள். 13 .12.2024.

பொருள்: தமிழ்நாடு பள்ளிக்கல்வி அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – பணிவரன்முறை – நாமக்கல் மாவட்டம், பெரியமணலி, அரசு மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து 27.05.2016 அன்று காலமான திரு.கா.கனகராஜ் என்பவரின் வாரிசுதாரர் திரு.க.ரமேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்டது – நியமன நாள் 01.08.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.100 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் துறை நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை நாள்.23.01.2020.
3. அரசாணை (நிலை) எண்.151, பள்ளிக் கல்வி (பக1(1))த் துறை, நாள்.09.09.2022.
4. அரசாணை(நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(க்யூ1) துறை, நாள்.08.03.2023.
5. சேலம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 006909/ஆ1/2023, நாள்.31.07.2023.
6. தாரமங்கலம் மாவட்டக் கல்வி அலுவலரின் (தொடக்கக் கல்வி) கடிதம் ந.க.எண்.1697/அ1/2024, நாள்.15.05.2024.
7. அரசு கடிதம் (efile) எண். 4419/தொ.க.1(1)/2024–1 நாள்.17.05.2024.
8. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.26062/ஜே/இ2/ 2023, நாள்.22.05.2024.

------

நாமக்கல் மாவட்டம், பெரியமணலி, அரசு மேல்நிலைப்பள்ளியில் சுகாதரம் மற்றும் துப்புரவாளராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் 27.05.2016 அன்று காலமான திரு.கா.கனகராஜ் என்பாரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.க.ரமேஷ் என்பார் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்கக் கோரி விண்ணப்பித்ததின் அடிப்படையில், பார்வை–2 மற்றும் 4 இல் காணும் அரசாணையில் நிர்ணயம் செய்துள்ள, கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ளதின் அடிப்படையில், **திரு.க.ரமேஷ்** என்பவருக்கு பார்வை–5 இல் காணும் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணிநியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளதன்படி, தனியர் சேலம் மாவட்டம், கொங்கணாபுரம், வட்டாரக் கல்வி அலுவலகத்தில் 01.08.2023 முற்பகல் அன்று பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.

2) கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ள மேற்கண்டுள்ள பணியாளரின் பணியினை வரன்முறைபடுத்தக் கோரும் கருத்துருக்கள், பார்வை–6 இல் காணும் தாரமங்கலம் மாவட்டக் கல்வி அலுவலரின் (தொடக்கக் கல்வி) பரிந்துரை கடிதத்துடன் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டது.

3) பார்வை–1 இல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதல் பெறும் நடைமுறையை கைவிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட எவ்வித விதித்தளர்வும் தேவைப்படாத நேர்வில், பார்வை –4 இல் காணும் அரசாணையின் இனம்–16 இன்படி சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட வேண்டுமென அறிவுறுத்தியுள்ள பார்வை–7 இல் காணும் அரசுக் கடிதத்தின்படி செயல்படுமாறு பார்வை–8 இல் காணும் பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) இந்நேர்வில், தனியரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் அடிப்படையில், தனியரின் பணியினை வரன்முறைப்படுத்த விதித்தளர்வு ஏதும் தேவையேற்படாத நிலையில், மேற்குறிப்பிட்டுள்ள

Scanned with OKEN Scanner

அரசாணைகள் மற்றும் அரசுக் கடிதங்களின்படியும் மற்றும் பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளின்படியும், பார்வை-3 இல் காணும் அரசாணையின்படியான அதிகார பகிர்வின் அடிப்படையில் நியமன அலுவலர் என்கின்ற முறையில், தனியரது பணியினை கீழ்க்காண் படிவத்தில் உள்ளவாறு, அன்னவரது பெயருக்கெதிரில் கலம்-5 இல் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர்/பதவி/பணிபுரியும் பள்ளி/அலுவலகம் திரு/திருமதி. | இறந்த அரசு ஊழியரின் பெயர், பதவி மற்றும் பணிபுரிந்த பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | க.ரமேஷ், இளநிலை உதவியாளர், வட்டாரக் கல்வி அலுவலகம், கொங்கணாபுரம், சேலம் மாவட்டம். | திரு.கா.கனகராஜ், சுகாதரம் மற்றும் துப்புரவாளர், அரசு மேல்நிலைப் பள்ளி, பெரியமணலி, நாமக்கல் மாவட்டம். | 01.08.2023 முற்பகல் | 01.08.2023 முற்பகல் |

**நிபந்தனைகள்:**

1. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்று ஆண்டு தொடர் பணிக்காலத்திற்குள் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்திடல் வேண்டும்.
2. தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் பவானிசாகர் அரசு அலுவலக அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
3. தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.
4. தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற குறிப்பிட்ட காலக்கெடுவான ஐந்தாண்டுகளுக்குள் தேர்ச்சி பெறவில்லையெனில் பணிநீக்கம் செய்யப்படுவார்.

பணிவரன்முறை குறித்த பதிவுகள் சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்படவேண்டும். தனியரின் பணிப்பதிவேடு மற்றும் அசல் சான்றுகள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. இதனை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் உடன் அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**இணைப்பு :**
அசல் பணிப்பதிவேடு மற்றும் அசல் சான்றுகள்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
சேலம்.

பெறுநர் :
திரு.க.ரமேஷ்,
இளநிலை உதவியாளர்,
வட்டாரக் கல்வி அலுவலகம், கொங்கணாபுரம்,
சேலம் மாவட்டம். (உரிய வழியாக).

நகல் :
1.வட்டாரக் கல்வி அலுவலர், கொங்கணாபுரம், சேலம் மாவட்டம்.
2.மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி), தாரமங்கலம்.

Scanned with OKEN Scanner